விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka






# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 115 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 30 வெள்ளிக்கிழமை (12.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.போதனாவின் மருத்துவ கழிவுகள் அரியாலையில் தனியார் காணிக்குள் எரிப்பு

### யாழ். – கண்டி வீதியை மறித்து மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அரியாலையில் உள்ள தனியார் காணி ஒன்றில் எரியூட்டப் பட்டதைக் கண்டித்து யாழ். - கண்டி பிரதான வீதியை மறித்து பொதுமக்கள் நேற்றுப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டமானது நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலைக் கழிவுகளை அரி 15



புத்தாண்டை முன்னிட்டு

## தொடர்ந்து எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது சிபெட்கோ எரிபொருள் நிலையங்களினால் தொடர்ச்சியாக எரி 15

புத்தாண்டை முன்னிட்டு

## சில பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு லங்கா சதொச நிறுவனம் சில அத்தியாவசிய நுகர் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இதன்படி நெத்தலி, வெங்காயம், கோதுமை மா மற்றும் வெள்ளை அரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ நெத்தலி 125 ரூபாய் விலை 15

### ஜனாதிபதித் தேர்தல்

# பெரமுன சார்பில் பசில் களத்தில்?

### தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் பசில் ராஜபக்ஷ களமிறங்கவுள்ளார் என தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)



நுணாவில் மத்தியில்

## வீட்டுக் கிணற்றில் பெண் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் மத்தி பகுதியில் உள்ள வீட்டுக் கிணறொன்றில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

60 வயதான பெண் ஒருவரே இவ்வாறு கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15

## எந்தச் சின்னத்தில் களமிறங்குவது?

### ஆலோசனைக் குழு அமைத்து ஆராய்கின்றார் ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட வேண்டிய சின்னம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்து வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை தேசிய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க எதிர் 15



## மதவாச்சியில் 23 வயது இளைஞன் மீது தாக்குதல்

### இரு பொலிஸார் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - மதவாச்சியில் வைத்து 23 வயதான இளைஞர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சார்ஜன்ட் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். 15

முள்ளியவளையில் விபத்து

## படுகாயமடைந்திருந்த மற்றைய நபரும் மரணம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதிய விபத்தில் படுகாயம் அடைந்திருந்த மற்றைய நபரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கனுக்காக்கேணி முள்ளியவளையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கனகராஜா நிமலன் (வயது- 41) என்பவரே 15

## ‘34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு’ புலிகளை மீள உருவாக்க முயற்சியா?

### எழுத்தாளர் தீபச்செல்வனிடம் பயங்கரவாத பிரிவு விசாரணை

(யாழ்ப்பாணம்)

“34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு” எனும் நூல் புலிகளை மீள உருவாக்க முயற்சிக்கின்றது என ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நேற்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

புத்தக வெளியீட்டு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தமைக்காக தமிழ்த் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரான தீபச்செல்வனிடம் இவ்வாறு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவைக்கான நேர்முகத் தேர்வு

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களிற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான நேர்முகத் தேர்வானது எதிர் வரும் 24.04.2024, 25.04.2024 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ் நேர்முகத்தெரிவிற்கு தகைமை பெற்றவர்களிற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது என்பதுடன் நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளமான www.edumin.np.gov.lk ஆகியவற்றின் ஊடாக பார்வையிட முடியும். (ம-7.10)

## தற்காலிக வீதித்தடை

எதிர் வரும் 2024.04.14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை புது வருடப் பிறப்பை முன்னிட்டு நல்லூர் கந்தப்பெருமான் வெளி வீதி யுலாவந்து பக்தர்களுக்கு அருள்பாளிக்கவுள்ளார்.

எனவே குறித்த தினத்தன்று காலை 7.30 மணியிலிருந்து 8.30 மணி வரையான நேரப்பகுதியில் பருத்தித்துறை வீதியானது செட்டித்தெரு வீதி சந்தியிலிருந்து கோவில் வீதி சந்தி வரைக்கும் மற்றும் கோவில் வீதியானது சங்கிலியன் வீதி சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதி சந்தி வரைக்கும் தற்காலிகமாக தடை செய்யப்பட்டு இருக்கும் எனவே பொது மக்கள் மாற்று வீதிகளை பயன்படுத்தி ஒத்துழைப்பினை நல்குமாறும் யாழ் மாநகர சபையினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7.10)


## தவறிவிட்டது

கல்லுண்டாய் காக்கைதீவிற்கும் கோண்டாவில் GPS வீதிகளுக்கும் இடையில் NP MF-1846 எனும் இலக்கத்தை கொண்ட வாகன இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 663 6384
021 222 1764



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 1958.08.23 மறைவு 2024.03.14

கடந்த 14.03.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **கந்தசாமி ஸ்ரீசந்திரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 13.04.2024 சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலைப் புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்போடு அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ஜனா வாசகம்"
ஊறிக்காடு வல்வெட்டித்துறை.

இங்ஙனம்: குடும்பத்தினர்
074 058 1614

(0016)



## பதவி வெற்றிடங்கள்

PUJO RESTAURANT



Vacancy

புதிதாக ஆரம்பித்த உணவகத்தில் வேலை வாய்ப்புகள் உள்ளன

JOIN OUR TEAM

- Waiter - உணவு பரிமாறுபவர் (35,000/=)
- Cleaner - துப்பரவுப் பணியாளர் (30,000/=)

Full Time/ Part time
Male / female

இல.483, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 077 3138

(433)



## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை திருமதி விஜயபாரதி மோகலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் சிவசுப்பிரமணியம் செல்லம்மா

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயருடன்...
சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(C-0013)



## மணிவிழா வாழ்த்து



திருமதி மாலினி அமிர்தலிங்கம்

(சிரேஷ்ட ஆசிரியை –
பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி SLTS - I
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்)

சேவை விபரம்

- 2000.01.03. - 2001.06.13 யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
- 2001.06.14 - 2003.06.31 கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
- 2003.07.01 - 2004.09.15 யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
- 2004.09.16 - 2004.12.31 யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
- 2005.01.01 - 2015.02.14 யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
- 2015.02.15 - 2024.04.12 யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

கற்றறிந்த வித்தையினை
கவிநயமாக விதைத்து
கல்விப் பணியே கடவுட் பணியென
எண்ணிலா மாணவர்க்கு
எளிதாய் போதித்து
வாழ்வில் ஏற்றமுற
அரவணைத்த ஆசானின்
மணிவிழா நாள் இதுவாம்

BEST WISHES

ஆசிரியர் நட்புறவுக் கழகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

(423)



## மானிப்பாயில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்

ஆறு அறைகளைக் கொண்ட அழகிய மாடி வீடு



- வெளிநாட்டில் இருந்து வந்து விடுமுறையை கழிப்பவர்கள், கொண்டாட்டம் செய்பவர்கள்.
- புகைப்பட Photo Shoot எடுப்பவர்களுக்கும் உகந்தது.
- அனைத்து விதமான நிறுவனத் தேவைகளுக்கும் உகந்தது.
- நாட்கள், வாரங்கள், மாதங்கள் என தங்கள் தேவைகளுக்கேற்ப அனைத்து வசதிகளுடன்கூடிய அழகிய இல்லத்தை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு : மனோகரதாஷன்(ரகு)
0041 76 788 4131
077 377 5641 (ஜான்சன்)

(431)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்புக்கு அமெரிக்கா எப்போதும் ஆதரவளிக்கும்

(வோஷிங்டன்)

**இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்புக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்கும் என ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் உறுதியளித்துள்ளார்.**



தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொலைபேசிக் கலந்துரையாடலின் போதே ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பொது நிதி, பணம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுவதாகவும் அவர் உறுயளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## முன்னாள் ஜனாதிபதிகள் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும்

### டலஸ் பகிரங்க அறிவிப்பு



(கொழும்பு)

தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ள நான்கு முன்னாள் ஜனாதிபதிகளும் தமது சொந்த நலனுக்காகவும், மக்களுக்காகவும் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

"அரசியலில் இருந்து விலகி இருப்பது அவர்களின் சொந்த ஆரோக்கியத்திற்கும், மக்களின் நலனுக்கும் நல்லது. அவர்களுக்காக செலவிடப்படும் பொது நிதியை எந்த அரசியல் விடயத்திற்கும் பயன்படுத்தக்கூடாது" என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் குயின்சி அடம்ஸ் ஒரே ஒரு முறை அமெரிக்க காங்கிரஸ்க்கு போட்டியிட்டார். பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் அரசியலில் இருக்கும் ஒரே வெளிநாட்டு தலைவர் அவர் தான் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

## கட்சித் தாவல்கள் மூலம் எந்தக் கட்சியும் பலமடையாது

### சரித்த ஹேரத் எம்.பி

(கொழும்பு)

கட்சித் தாவல்களின் ஊடாக எந்த அரசியல் கட்சிகளையும் பலப்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டமே இந்த நாட்டிற்கு தற்போது அவசியமாகின்றது.

அரச செலவீனத்தை முகாமைத்துவம் செய்வதற்கான நுட்பமே நமக்கு தேவைப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக கூறி தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களையே நடைமுறைப்படுத்துகின்றது. இதனூடாக கடன் செலுத்தும் நடவடிக்கையை மாத்திரம் மேற்கொள்ளவுள்ளனர் என சரித்த ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)









தாயகத்தின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான வேலணையூர் சுரேஷ் மற்றும் வெற்றி துஷ்யந்தன் ஆகியோர் பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் அண்மையில் இடம்பெற்ற சிறப்புக் கலைநிகழ்வுகளில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இதன்போது இவர்களின் கவி ஆளுமைக்காக புலம்பெயர் உறவுகள் நினைவுக் கேடயங்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி மதிப்பளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈசியா வென்றது மும்பை

## பெங்களூருவுக்கு மீண்டும் பலத்த அடி



ஐ.பி.எல்., லீக் போட்டியில் சூர்யகுமார் (52 ஓட்.,), பும்ரா(5 விக்.,) கைகொடுக்க மும்பை அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூருவை ஊதித் தள்ளியது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. மும்பையில் நடந்த லீக் போட்டியில் மும்பை, பெங்களூரு அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

பெங்களூரு அணிக்கு ஹோலி (3), ஜாக்ஸ் (8), மக்ஸ்வெல் (0) ஏமாற்றினர். பின் இணைந்த ரஜத் படிதர் (50), அணித் தலைவர் டுபிளசி அரைச்சதம் விளாசினர். பும்ரா வேகத்தில் டுபிளசி (61) வெளியேறினார்.

**ஐந்து விக்கெட்**

ஐ.பி.எல்., அரங்கில் இரண்டு முறை, ஒரு இன்னிங்சில் 5 அல்லது அதற்கு மேல் விக்கெட் சாய்த்த 4வது பவுலரானார் பும்ரா. ஏற்கனவே ஜேம்ஸ் பால்க்னர், ஜெயதேவ் உனத்கட், புவனேஷ்வர் குமார் இப்படி சாதித்திருந்தனர்.

* தவிர, பெங்களூருவுக்கு எதிராக 5 விக்கெட் கைப்பற்றிய முதல் பந்துவீச்சாளரானார் பும்ரா. இதற்கு முன் 2015ல் சென்னையின் நெஹ்ரா 4/10 விக்கெட் வீழ்த்தியது அதிகபட்சமாக இருந்தது.

**கார்த்திக் அரைசதம்**

தொடர்ந்து மிரட்டிய பும்ரா பந்து வீச்சில் மஹிபால் (0), சவுரவ் சவுகான் (9) நடையைக் கட்டினர். வைஷாக்கை (0) அவுட்டாக்கி தனது 5ஆவது விக்கெட்டை பெற்றார். ஆகாஷ் மத்வால் வீசிய கடைசி ஓவரில் வரிசையாக 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த தினேஷ் கார்த்திக் 22 பந்தில் அரைசதம் கடந்தார்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது.

கார்த்திக் (53), ஆகாஷ் தீப் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மும்பை சார்பில் பும்ரா 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**இஷான் விளாசல்**

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு இஷான் கிஷான், ரோகித் சர்மா ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. டாப்லே வீசிய 3ஆவது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விரட்டினார் இஷான். சிராஜ் வீசிய 5ஆவது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த இஷான், மக்ஸ்வெல் பந்தை சிக்சருக்கு அனுப்பி 23 பந்துகளில் அரைசதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்காக 101 ஓட்டங்கள் சேர்த்த போது ஆகாஷ் தீப் பந்தில் இஷான் (69 ஓட்டங்கள், 5 சிக்சர், 7 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.

**சூர்யகுமார் அபாரம்**

அடுத்து வந்த சூர்யகுமார் (செல்லமாக சூர்யா), ஆகாஷ் தீப் வீசிய 11வது ஓவரில் 3 சிக்சர், ஒரு பவுண்டரி உட்பட 24 ஓட்டங்கள் குவித்தார். வில் ஜாக்ஸ் பந்தில் ரோகித் (38) ஆட்டமிழந்தார். டாப்லே வீசிய 13வது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்த சூர்யகுமார் 17 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இவர், 52 ஓட்டங்களில் (4 சிக்சர், 5 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அசத்திய அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, ஆகாஷ் தீப் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 15.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை 199 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாண்ட்யா (21), திலக் வர்மா (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ம-7,10)






# இளம் வீரர்கள் சாதிப்பது எப்படி?

## ரகசியம் சொல்கிறார் சஷாங்க்



"உள்ளூர் போட்டிகளில் கடின உழைப்பு, தன்னம்பிக்கை ஆகிய இரண்டும் தான், ஐ.பி.எல்., தொடரில் இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட காரணம்," என சஷாங்க் சிங் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்., வீரர்கள் ஏலத்தில் பஞ்சாப் அணி நிர்வாகத்தின் சார்பில் 19 வயது சஷாங்க் சிங்கிற்குப் பதில் தவறுதலாக வாங்கப்பட்டவர், 32 வயது சஷாங்க் சிங். இருப்பினும், துடுப்பாட்டத்தில் மிரட்டி வருகிறார்.

குஜராத்துக்கு எதிராக 29 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு உதவினார். ஹைதராபாத்துக்கு எதிரான போட்டியில் 25 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்து பஞ்சாப் அணியை வெற்றிக்கு அருகில் கொண்டு சென்றார்.

இத்தொடரில் ரகுவன்ஷி (கொல்கத்தா), அஷுதோஷ் (பஞ்சாப்), நிதிஷ் குமார் (ஹைதராபாத்) என அறிமுகமற்ற வீரர்கள் சிறப்பாக செயற்படுவது குறித்து சஷாங்க் சிங் கூறியதாவது,

இளம் வீரர்கள் உள்ளூர் போட்டிகளைப் போல, கடின உழைப்பை வெளிப்படுத்தி, தன்னம்பிக்கையுடன் விளையாடுவது தான் வெற்றிக்கு காரணம்.

இதனால் தான், ஐ.பி.எல்., போட்டிகளில் ஓட்ட மழை பொழிகின்றனர். ஹைதராபாத் வீரர் நிதிஷ் குமார் துடுப்பாட்டம், பந்துவீச்சில் சிறப்பாக விளையாடினார். உள்ளூர் போட்டிகளிலும் இவர் நன்கு செயறபடுவார்.

இவரும், அஷுதோஷும் முஸ்தாக் அலி, விஜய் ஹசாரே தொடரில் கலக்கினர். ரகுவன்ஷி ரஞ்சி தொடரில் அசத்தினார். இவர்கள் உங்களுக்கு அறிமுகமற்ற வீரர்களாக இருக்கலாம். ஆனால் உள்ளூர் கிரிக்கெட்டில் எல்லோருக்கும் தெரியும். அங்கு விளையாடியது போல ஐ.பி.எல்., தொடரில் சிறப்பாக செயற்படுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார். (ம-7,10)

## கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் – 2024

# டிறிபேர்க் ஸ்ரார் அணி 2ஆவது சுற்றுக்குத் தகுதி

கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டித் தொடரின் 5ஆவது போட்டியும் நடைமுறையிலும் 5ஆவது போட்டியும் 30.03.2024 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் டிறிபேர்க் ஸ்ரார் அணியை எதிர்த்து கான்ரநகர் கோவளம் அணி எதிர்த்தாடியது.

இதில் டிறிபேர்க் ஸ்ரார் அணி, கோவளம் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கோவளம் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் சதீஸ் 11, சசிகரன் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் டிறிபேர்க் ஸ்ரார் அணியைச் சேர்ந்த சங்கீதன் 3, ரஜீவ் 2, அஜன்தன் 1 இலக்கினைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டிறிபேர்க் ஸ்ரார் அணி 22.2 ஓவர்களில் 4 இலக்குளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரவீன் 11, துசின்தன் 25, மதூஸன் 14, பார்த்தீபன் 33, மயில்ராஜன் ஆட்டமிழக்காது 31, விதூஸன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் கோவளம் அணியைச் சேர்ந்த துவாரகன் 2 இலக்கினைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய டிறிபேர்க் ஸ்ரார் அணி இன்று (12.04.2024) காலை 8.30 மணிக்கு அரியாலை சென்றல் அணியை 2ஆவது சுற்றில் எதிர்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது 33 ஆண்டு ஆன்மீகப் போராட்டப் பாதையிலே!

**என் அன்பு உள்ளங்களே !**

கார்மேகத் திரையகற்றி காலைக் கதிரவன் ஒளிவீசும் குரோதி புத்தாண்டில் பழையன நீங்கிட புதியன மலர்ந்திட புதுமைகள் பூத்திட நாடுவளம் பெற மக்கள் நலம் பெற இறையருள் வேண்டி சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகனின் திருப் பாதங்களை வணங்கி இப் புத்தாண்டை வருக! வருக! என வரவேற்று வாழ்த்துகின்றேன்.

இத்துடன் ஈசுர விநாயகனின் சூத்திரத்திலேயுள்ள திருவாக்குகளைச் சற்று சிந்திப்போம். அன்று (08.11.1991) எமது நாட்டுப் பிரச்சி னை சம்பந்தமான மனுவை ஈசுர விநாயகரிடம் அடியேன் சமர்ப்பித்த போது இப் பிரச்சினை நீண்டது. மிகவும் சிக்கலானது எவராலும் தீர்க்க முடியாதது. என்ற ஈசுர விநாயகனின் திருவாக்கைக் கேட்டதும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரே! கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையாரே இவ்வுலகத்திலே உங்களால் முடியாதது என்று ஒன்றும் இருக்க முடியாது என்று அடியேன் அவரைச் தஞ்சமடைந்து வற்புறுத்தினேன். அடியேனின் வற்புறுத்தலை ஏற்றுக் கொண்ட ஈசுர விநாயகர் தீர்த்துத்தான் இருப்பேன் என்று கூறியருளினார் என்ற அன்றைய கூற்றை இப்போது எல்லோருக்கும் ஞாபகப்படுத்துகின்றேன்.

ஈசுர விநாயகனின் சூத்திரத்திலே அடுத்த கட்டம் நாடு பறிபோகு மாப்போல ஒரு நிலையை ஏற்படுத்த திருவுள்ளம் கொண்டுள்ளார் என்றும் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து வந்த பின்னரே எமது நீண்ட கால இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் கூறியிருந்தேன். இலங்கையின் இறையாண்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் காரணி களை இருவகைப்படுத்தலாம். 01) இலங்கையின் சமகால அரசியலின் அகநிலைக்காரணி இதுவரை நடைபெறாத (தேர்தல்) அரசியல் சண்டைகள் பெரும் போராக மாறும். இனக்கலவரமாக மாறும்.

02) புறநிலைக்காரணி இந்து சமுத்திரத்தின் வல்லாதிக்கப் போட்டிகள் (இந்தியா, அமெரிக்கா, சீனா) கச்சதீவு விவகாரம்

**தற்போது எழுந்துள்ள கச்சதீவு விவகாரம் பற்றி.....**

இலங்கைக்கான முன்னாள் இந்தியத்தூதுவர் ஒஸ்டின் பெர்னாண்டோ அவர்களின் கூற்று இவர் நீண்டகாலம் இலங்கையின் வெளிவிவ காரத்துறையில் மிகவும் அனுபவம்வாய்ந்த சிரேஷ்ட இராஜ தந்திரிகளில் ஒருவர். தனது கடல் எல்லையை இந்தியா தாண்டக்கூடாது மீறினால் இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்றும் வரும் இந்திய தேர்தலுக்காக பா.ஜ.க கச்சைதீவைப் பயன்படுத்தி இருக்கலாம் என்றும் தேர்தலின் பின்னர் இப் பிரச்சினை கடினமாகலாம். எனவே எங்கள் நாட்டின் தற்போதய நிலையில் கிளறியிருக்கக்கூடாது என்று கூறியுள்ளார்.

அப்படியானால் கச்சதீவு விடயத்தைக் கிளறியவர் யார்? வேறுயாருமல்ல அவர்தான் சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகர். எதற்காக? ஐயா வலம்புரி (16.11.2023) பத்திரிகையில் ஈசுர விநாயகரின் அனுக்கிரகத்துடன் எழுதியிருந்தேன். இந்தியா - இலங்கை உறவுகளில் கடும் பாதிப்பு ஏற்படும். இந்தியா இலங்கை மீது சீறிச்சினக்கும். வெளியுறவுக் கொள்கைகளில் காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்படும். இலங்கையுடனான இதுவரை கடைப்பிடித்து வந்த வெளியுறவுக் கொள்கையில் மீள் பரிசீலனை செய்யும். தெய்வீகத்தின் தொழிற்பாடு யாது? மனிதனுக்குச் சந்தர்ப்பம் சூழ்நிலைகளை உருவாக்கி கொடுப்பதேயாகும். காரணமின்றி காரியங்கள் நடப்பதில்லை.

1987 இலங்கை- இந்திய ஒப்பந்தம். இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா இலங்கையில் இராணுவ ரீதியாகத் தலையிடவும் பின்னர் செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களினால் பொருளாதார ரீதியாகத் தொழிற்படவும் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவை மீறி அரசியல் தீர்வு ஒன்றை காண இயலாது என்ற வகையில் அரசியல் ரீதியாகவும் தலையிடவும் இந்தியா வலிமை பெற்றுவிட்டது எனலாம்.

1987 இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக இந்திய அமைதிப் படையின் வருகையோடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை கள் சொல்லவும் முடியாது. சொல்லியும் தீராது. முதலில் இந்திய இராணு வத்துடன் மோதல்கள் பொதுமக்கள், போராளிகள் இந்திய இராணுவத் தினரால் கொல்லப்பட்டனர். இம் மோதல்களைத் தொடர்ந்து உண்ணா விரதப் போராட்டங்கள் நல்லூரிலும் மட்டக்களப்பிலும், ராஜீவ் காந்தியின் கொலை. அதனால் நீண்டகாலமாக ஏற்பட்ட துன்பங்கள் துயரங்கள் இறு தியாக மீனவர் பிரச்சினைகள் கடல் எல்லையை அத்துமீறி மீன் பிடித்தல் இவை காரணமாக ஏற்பட்ட போராட்டங்கள் சம்பந்தமாக மக்கள் மனங்களில் ஏற்பட்ட இந்திய விரோத அதிர்வலைகள், எதிர்ப்புக்கள், வெறுப்புக்கள் யாவற்றிற்கும் இந்தக் குரோதி வருடம் அனைத்து தமிழ் மக்களுக்கும் ஆறுதல் அளிக்க வேண்டி ஈசுர விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆறுதல் செய்தி**

கடந்த 25 வருடங்களுக்கு முன்னதாக எனது ஆன்மீகப் போராட்டப் பாதையிலே ஈசுர விநாயகர் ஒரு இந்திய அறிவாளிக்குழுவைக் காண்பிக்கின்றார். அப்போது அந்தக் குழுவிலே (ஆண்களும் பெண்களும் இருப்பதைக் கண்டேன்) அத்துடன் ஈசுர விநாயகர் அசரீரி மூலம் வெளிப்படுத்துகின்றார். இவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல இவர் தான் இந்திய நாட்டின் அறிவாளிக்குழு. இவர்களுக்கு தமிழினம் என்றென்றும் சந்ததி சந்ததியாக நன்றிக்கடன் செலுத்தக் கடவது என்று அசரீரி கூறியருளியது. இவ் விடயத்தை தமிழ் மக்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இலங்கை விவகாரத்தில் இந்திய அறிவாளிக்குழு தக்க நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கக் காத்து நிற்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். பொறுத்தார் நாடாள்வர் என்பதை உணர்வோமாக. இன்று வரை நடந்ததெல்லாம் நாளை மாறலாம் அந்த ஒருவன் நடத்தும் நாடகத்தை நிறுத்த முடியுமா?

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்)**

(429)

# இராசிபலன்

12. 04. 2024
பங்குனி 30, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 5.45 மணிவரை

ரேகினி பின்னிரவு 5.15 மணிவரை
சுபநேரம் 6.06-7.36 மணிவரை
இராகுகாலம்-10.36-12.06 மணிவரை

சக்தி கணபதி சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - அத்தம்

**வளவன்**




எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய பொறுப்புக்கள் கூடும் நாள்.




வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.




ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள்.




தொட்டகாரியங்கள் துளிர்விடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகமான நாள்.




மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பற்றாக்குறை தீர்ந்து வளம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர் சந்திப்பண்டு.




கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறாமல் தாமதமாகலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.





வழிபாட்டில் ஆர்வம் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரி யங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் போசன சுகமுண்டு.

ஒருவர் வேண்டாததை வாங்கினால் வேண்டியதை விற்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய சப்பைரத வெள்ளோட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
(படங்கள்:-சிவசாந்தன்)


## கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

50 ஆயிரத்து 500 மில்லி கிராம் கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொற்றாவத்தையைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் பாடசாலை மாணவர்களுக்கு கேரள கஞ்சா விற்பனை செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸார் 50 ஆயிரத்து 500 மில்லிகிராம் கேரள கஞ்சாவுடன் குறித்த இளைஞனை கைது செய்துள்ளதோடு பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (நி-5-6-60)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பூநகரியில் உணவுப் பாதுகாப்பு பரிசோதனை



(சாவகச்சேரி)

புதுவருடப்பிறப்பு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பூநகரிப் பகுதியில் விசேட உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகள் பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழாமினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் பிரிவுகளின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து வாடியடி, ஞானிமடம், ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, நாச்சிக்குடா, முழங்காவில் போன்ற பகுதிகளில் உள்ள உணவகங்களில் இந்த விசேட உணவுப்பாதுகாப்பு பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

பரிசோதனைகளில் கைப்பற்றப்பட்ட சுகாதாரத்துக்கு கேடான பொருட்கள் வர்த்தகர்களின் சம்மதத்தோடு அழிக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட ஒருதொகுதி உணவுப்பொருட்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீதியோரங்களில் சுகாதாரமற்ற முறையில் பழச்சாறு, வடை மற்றும் சர்பத் வியாபாரம் செய்வோர் எச்சரிக்கப்பட்டதோடு சரியான சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது. மீறிச்செயற்படுவோர் மீது தொடர் கண்காணிப்பின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பூநகரி சுகாதாரப் பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-30)




தெல்லிப்பழை பொது நூலகமானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டு, நூலக நுழைவு வாயில் அங்குராற்பணம் நேற்று முன்தினம் வலி வடக்கு பிரதேச செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் இடம்பெற்றது.
(படம்:-சிவசாந்தன்)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
(படம்:-சிவாந்தன்)

# சடுதியாக குறைவடைந்த காய்கறிகளின் விலை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது காய்கறிகளின் விலை சடுதியாக குறைவடைந்து காணப்படுவதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ கத்தரிக்காய் 100-150 ரூபாய் வரையிலும் பயற்றங்காய் 80-100 ரூபாய் வரையிலும் பூசணிக்காய் 100 ரூபாய் மற்றும் ஏனைய காய்கறிகள் 150-200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதன் காரணமாக தோட்டச் செய்கையாளர்களிடமிருந்து 60 ரூபாய் தொடக்கம் 80 ரூபாய் வரையிலான விலைகளுக்கே வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் தோட்டச் செய்கையில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், காய் கறிகளின் விலையில் மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் கிருமி நாசினிகளில் மாற்றம் ஏற்படவில்லை. அவை அதிகரித்தே காணப்படுகின்றது. அதிக விலை கொடுத்து கிருமி நாசினி உர வகைகளை கொள்வனவு செய்தும் உரிய பலனைப்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6-[illegible])

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 100 | 200 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 | 150 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 140 | 200 | 150-200 |
| தக்காளி | 140 | 100 | 100 | 150 | 80-120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 160 | 100-130 |
| கோவா | 200 | 160 | 240 | 200 | 200 |
| கரட் | 350 | 350 | 380 | 350 | 300 |
| பூசணி | 150 | 140 | 100 | 130 | 80-100 |
| புடோல் | 120 | 200 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 80 | 150 | 70-120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 300 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 330 | 400 | 280 |
| பாகற்காய் | 280 | 300 | 200 | 250 | 300 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 | 120-170 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | 150 | -- |
| பயற்றங்காய் | 180 | 200 | 100 | 100 | 120-170 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | 200 |
| பீற்றூட் | 200 | 280 | 200 | 250 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 200 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 500 | 800 | 350-650 |
| போஞ்சி | 300 | 400 | 250 | 300 | 170 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 80 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 50 | 100 | 60-100 |
| தேசிக்காய் | 400 | 300 | 250 | 450 | 350-600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 80-120 | 60-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 350 | -- |
| வெங்காயப்பூ | -- | 250 | 250 | 400 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 90 |
| [illegible] | 80 | -- | 100 | [illegible] | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு தள்ளுபடி தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தையில் காணப்படும் புத்தாண்டு தள்ளுபடிகள் மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் அதிகார சபை கேட்டுக்கொண்டுள்ளது.**

இந்நாட்களில் ஆடைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை கொள்வனவு செய்வதில் நுகர்வோர் அதிக ஆர்வம் காட்டுவதால், தள்ளுபடிகள் மூலம் பொருட்களை கொள்வனவு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென நுகர்வோர் அதிகாரசபையின் விசேட சோதனை மற்றும் விசாரணைகளின் பணிப்பாளர் சஞ்சய் வீரசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான பண்டிகைக் காலங்களில் தள்ளுபடி பொருட்களில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், விலையில் உள்ள வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு, தள்ளுபடி செய்யப்பட்ட பொருட்களின் தரம் குறித்தும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு பொருளுக்கும் பிரச்சினை ஏற்பட்டால், ஆதாரங்களுடன் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு எழுத்துப்பூர்வமாக முறைப்பாடு செய்ய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5-6)

## மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 இலங்கையர்கள் மீட்பு

(மியன்மார்)

மியன்மாரில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட 8 இலங்கையர்களும் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் சில தினங்களில் அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், மியான்மரில் தாய்லாந்து எல்லையில் ஆயுதம் ஏந்திய குழுவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய இலங்கையர்களை விடுவிப்பதற்கு தந்திரோபாய திட்டம் தேவை என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார். (நி-5-6)

## முட்டை விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

சில நாட்களாக சற்று குறைந்திருந்த உள்ளூர் முட்டை விலை தற்போது மீண்டும் உயர்ந்துள்ளது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொருளாளர் விஜய் அலிவிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ளூர் முட்டையின் மொத்த விலை 50 ரூபாவாகவும் சில்லறை விற்பனையில் 55 ரூபாவாகவும் உள்ளது. எவ்வாறாயினும், இடைத்தரகர்கள் விலையை உயர்த்துவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை முட்டையின் விலை உயர்த்தப்பட்டால் மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை பண்டிகை காலத்தில் முட்டைகளின் தேவை அதிகரித்துள்ளதால் முட்டையின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சந்தை தரவுகள் குறிப்பிடுகின்றன. (நி-5-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union WU, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1989-R.C<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: -<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: O/L, மேசன் வேலை. விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தான பெண்<br>தொ.இ: B/14444 | பிறப்பு -1997- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 29 1/2<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்:MBBS (Final years)<br>எதிர்பார்ப்பு:Doctor, Software Engineer<br>தொ.இ: G/14474 |
| பிறப்பு: 1987 -இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 14 1/2<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்:Bsc IT, Msc, Manager (Pvt) (Australia)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14446 | பிறப்பு: 1998-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 24<br>உயரம்: 151 CM<br>தகைமை/தொழில்:Teacher<br>எதிர்பார்ப்பு:Engineer, Accountant, Banker, Dental Doctor<br>தொ.இ: G/14477 |
| பிறப்பு:-1985-இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>கி.பா: -<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:IT, Business (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள. படித்த பெண்<br>தொ.இ: B/14450 | பிறப்பு -1995- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:24<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: Bsc in IT, IT Analyist<br>எதிர்பார்ப்பு:IT தொடர்பானவர்<br>தொ.இ: G/14478 |
| பிறப்பு: 1998- இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா-78<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:-Bsc, Software Engineer(Pvt)<br>எதிர்பார்ப்பு:Engineer<br>தொ.இ: B/14451 | பிறப்பு -1998-இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: -<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14480 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபா மட்டும்


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 04. வேதவனப்பிள்ளையார் கோயில் வீதி. 44 (44 பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தையா ஆறுமுகம்,' கணபதி நாகமுத்து என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி ஐயனார் வீதியைச் சேர்ந்த வேதவனம் குமாரசாமியால் பிரசித்த நொத்தாரிசு செல்லையா பாலகிருஸ்ணன் அவர்கள் மூலம் 3593 இலக்க 16.10.2004 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதியில் இவ்வாதனம் தனது பிதாவால் தனது பெயருக்கு கொடுத்த நன்கொடை உறுதிப்படி தனது ஆட்சியானது என்றும், குறித்த நன்கொடை உறுதி தற்சமயம் தொலைந்து விட்டது எனவும் வெளிப்படுத்தி தனது மகள் அவ்வூர் குமாரசாமி பஞ்சகல்யாணிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி குமாரசாமி மகள் பஞ்சகல்யாணி என்பவரால் அவ்வூர் தங்கவடிவேலு சிவநேசனுக்கு பிரசித்த நொத்தாரிசு சண்முகலிங்கம் சிவரூபன் அவர்கள் மூலம் 05.01.2014 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4841 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி நகரசபை கிராம அலுவலர் பிரிவு J/305 சாவகச்சேரி இறை "நேரணிபுலம் நிலப்பரப்பு" 15 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.லோகநாதன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 04.04.2021 திகதிய 942 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 09 குளி 07. இதற்கெல்லை கிழக்கு-நடராசா பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம் வடக்கு-கைலுபூங்கையும் கணபதி கண்ணனுக்குரிய ஆதனமும் மேற்கு-தெரு தெற்கு- நடராசா இந்திராணிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் ஆகும்.

தற்போது தங்கவடிவேலு சிவநேசன் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ, தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற் குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(425)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய விஜயத்தின் போது மோடியை சந்திக்கும் மஸ்க்



(தென்னாபிரிக்கா)

பிரபல சமூக வலைத் தளமான எக்ஸ் வலைதளத்தின் உரிமையாளரும், டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க் எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தியாவிற்கு தனது உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியான இந்நிலையில், இந்த சந்திப்பு குறித்து எலான் மஸ்க் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில், "இந்தியாவில் பிரதமர் மோடியுடனான சந்திப்பை எதிர் நோக்கியுள்ளேன்" என்று பதிவிட்டார்.

அவரது இந்திய விஜயத்தின் போது மஸ்க் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மோடியுடனான சந்திப்பில் இந்தியாவில் புதிய முதலீடுகள் மற்றும் புதிய தொழிற்சாலைகளை அமைப்பது குறித்து மஸ்க் விவாதிக்க உள்ளார் எனவும் கூறப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்த நேரம் அவரை எலான் மஸ்க் சந்தித்து பேசிய போது, 2024இல் தான் இந்தியா வருவதாக எலான் மஸ்க் தெரிவித்திருந்தார், அதன்படி இந்தமாதம் அவர் தனது விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். (நி-5-6)

## பள்ளத்தில் பாய்ந்த ட்ரக் பாகிஸ்தானில் 13 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டியொன்று நேற்று முன்தினம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலோசிஸ்தானின் ஹப் மாவட்டத்தில் ஷா நூரானி சன்னதிக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ட்ரக் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதோடு, 30 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6)

## போருக்கு ...
## கிம் அதிர...



### கொரி...

**(பியாங்...**
**போருக்...**
**ஜனாதிப...**
**கொரிய ...**
**யுள்ளது...**

வடகொரிய ஜனாதி... உன் இந்த அறிவிப்... தெரிவித்துள்ளதாக ... அதிகாரபூர்வ செய்த... தெரிவித்துள்ளது.

வடகொரியாவின்... பல்கலைக்கழகத்தை... கிம் ஜாங் உன் ஆ...


## கூகுள் நிறுவனத்துக்கு சுமார் ரூ.400 கோடி அபராதம்

(மொஸ்கோ)

சர்ச்சைக்குரிய கருத்துக்களை நீக்க மறுத்த குற்றத்திற்காக கூகுள்நிறுவனத்துக்கு ரூ.407 கோடி (49 மில்லியன் டொலர்) அபராதம் விதித்து மொஸ்கோ நீதிமன்றம் உத்தரவிட்டது.


ரஷ்யாவில் பயங்கரவாதம் மற்றும் தன்பாலின ஈர்ப்பு குறித்தான உள்ளடக்கம் கொண்ட தகவல்களை பரப்பும் யூடியூப் வீடியோக்களை நீக்குமாறு கூகுள் நிறுவனத்துக்கு மொஸ்கோ நீதிமன்றம் அறிவுறுத்தியது.

இதனை நீக்க மறுத்த நிலையில் நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு புறம்பான தகவல்களை பரப்பி பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக கூகுள் மீது நீதிமன்றம் குற்றஞ்சாட்டியமைக்கு அமைவாக குறித்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)




## ஒலிம்பிக் தடகள போட்டியில் முதலிடம் பெறும் வீரர்களுக்கு பணப்பரிசு

### உலக தடகள சம்மேளனம்



(பாரிஸ்)

உலக தடகள சம்மேளனம் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து தடகள போட்டிகளில் முதலிடம் பெறும் வீரர்களுக்கு பரிசுத் தொகை வழங்க தீர்மானித்துள்ளது.

அதன்படி ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் முதல் விளையாட்டு சம்மேளனம் என்ற பெருமையை உலக தடகள சம்மேளனம் பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியிலிருந்து இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.

இதன்படி, தங்கப் பதக்கம் வெல்பவருக்கு 50,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

தங்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையானது இலங்கை பெறுமதியில் சுமார் 15,000,000 ரூபா என தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கும் 2028 முதல் ரொக்கப் பரிசுகள் வழங்கடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

கின்...
உ...



(வி... வ... வயத... அபாத்... கின்... நம்பப்... 12... லான... கல்ல... சினே... ஆம்... பிறந்... டியுள்... கி... னை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாராகுங்கள்
# ரடி அறிவிப்பு!

## ாரிய தீபகற்பத்தில் பதற்றம்

ங்யாங்)—


க்கு தயாராகுமாறு வடகொரிய பதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளமை ப தீபகற்பத்தில் பரபரப்பை ஏற்படுத்தி ு.

னாதிபதி கிம் ஜாங் விப்பை நேற்று ாக அந்நாட்டின் செய்தி நிறுவனம் .

வின் இரா னுவ த்தை ஜனாதிபதி ர் ஆய்வு செய்த நிலையில், வடகொரியாவை சுற்றி நிலைத்தன்மையற்ற அரசியல் சூழல் உள்ளதால், கடந்த கால த்தைக் காட்டிலும் இப்போது போருக்கு ஆயத்தமாக வேண் டியிருப்பதாக அவர் தெரிவித் தார்.

அமெரிக்காவும் தென் கொரி யாவும் இராணுவ பயிற்சிகளை அதிகளவில் மேற்கொள்வதை குற்றஞ்சாட்டியுள்ள வட கொரியா, இதன் காரணமாக கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்திருப்பதாகவும் தெரிவி த்துள்ளது. (நி-5-6)

# இயற்பியல் விஞ்ஞானி பீட்டர் ஹிக்ஸ் காலமானார்



(லண்டன்)

'கடவுள் துகள்' கண்ட றிந்த, நோபல் பரிசு வெ ன்ற இயற்பியல் விஞ்ஞானி பீட்டர் ஹிக்ஸ் காலமானார்.

இங்கிலாந்தை சேர்ந்த பிரபல வானியல் மற்றும் தத்துவார்த்த இயற்பியலா ளர் பீட்டர்ஹிக்ஸ் (வயது 94). வானியல் ஆராய்ச்சி யில் இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

பெருவெடிப்பின் போது அணுக்கள் ஒன்றோடு ஒன்று இணைவதற்கு காரணியாக அமைந்த பொருளை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மூத்த விஞ்ஞானிகளில் ஒருவராக இருந்தார்.

பீட்டர் ஹிக்ஸ் 2013 ஆம் ஆண்டு இயற் பியலுக்கான நோபல் பரிசை வென்றார்.

இந்த ஆராய்ச்சி பல்வேறு கேள்விக ளுக்கான விடைதந்தது. எடின் பெர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

இ ந் த நி லை யி ல் முதுமை காரணமாக பீட்டர் ஹிக்ஸ் எடின்பெர்க்கில் உள்ள தனது வீட்டில் இறந் த நிலையில் அவருடைய மறைவுக்கு நாசா உள் ளிட்ட விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் இரங்கல் தெ ரிவித்துள்ளன. (நி-5-6)

# கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த உலகின் வயதான நபர்




(லிமா)

பெரு நாட்டைசேர்ந்த 124 வயதான மார்சிலோனா அபாத் என்ற முதியவர் உல கின் வயதான நபர் என்று நம்பப்படுகிறார்.

12 தசாப்தங்களுக்கு மே லான வாழ்க்கையின் மைல் கல்லை கடந்துள்ள மார் சிலோனா அபாத் கடந்த 5 ஆம் திகதி 124 ஆவது பிறந்த நாளை கொண்டா டியுள்ளார்.

கின்னஸ் உலக சாத னையில் அபாத்தின் பெயரை உலகின் வயதான நபராக பதிவு செய்ய உதவியதாக பெரு நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர் 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி ஹவா ன்கோ பகுதியில் பிறந்ததாக கூறப்படுகிறது.

பழங்கள் மற்றும் ஆட்டி றைச்சியை சாப்பிடுவதால் தான் எனக்கு சுறுசுறுப்பும், ஆரோக்கியமும் இருப்பதாக அபாத் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் சிக்கி
# ஹமாஸ் தலைவரின் மகன்கள் உயிரிழப்பு



(காசா)

ஹமாஸ் அமை ப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹ னி யே வி ன் மூன்று மகன்கள் இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலில் பலியாகியுள்ளனர்.

காசாவின் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை இந்த தாக் குதல் நடத்தப்பட்டு ள்ளது என இஸ் ரேல் படைத்தரப்பும் உறுதிப்படு த்தியுள்ளது.

அல் ஜசீரா அரபுக்கு அளித்த பேட்டியில் ஹனியே, தனது மகன்களான ஹஸீம், அமீர் மற்றும் முகமது மற்றும் பேரக்குழந்தைகள் புதன் கிழமை கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தினர்.

போர் தொடங்கியதில் இரு ந்து அவரது குடும்பத்தைச் சேர்ந்த 60 பேர் கொல் லப்பட்டனர்.பாலஸ்தீனிய தலை வர் களின் குடும்பங்கள் மற்றும் வீடுகளை குறிவைத்தால் அவர்கள் ஒரு போதும் பின் வாங்கமாட்டார்கள் என்று மேலும் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீர்வேலி கிறீன்லேயர் சுற்றுச்சூழல் அமைப்பினரால் கடந்த சனிக்கிழமை மாலை, இயற்கை விவசாயத்தின் தந்தை எனப் போற்றப்படும் தஞ்சாவூரில் வாழ்ந்து மறைந்த கோ.நம்மாழ்வாரின் பிறந்ததினத்தில் வடலியடைப்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன.

## மன்னாரில் கொட்டி தீர்த்த மழை

(மன்னார்)

மன்னார் தீவகப்பகுதிக்குள் நீண்ட வெப்ப காலநிலை நிலவி வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை கடுமையான மழை பொழிந்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நிலவி வந்த அதிகளவான வெப்பம் மற்றும் வறட்சி நிலவி வந்த நிலையில் நேற்று கடும் மழை பெய்துள்ளது.

குறுகிய நேர மழை பெய்த போதிலும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6-285)

## இலங்கையில் முதலீடு செய்வதற்கு சுதந்திரம் வேண்டும்

### சீன ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு 'நியாயமான மற்றும் வெளிப்படையான' சூழலின் அவசியத்தை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் தினேஸ் குணவர்தனவுடன் அண்மையில் நடத்திய சந்திப்பின்போது சீன ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமது நாடு முடிவுகளை எடுக்கும் போது தேவையில்லாமல் மற்ற நாடுகளால், இலங்கையின் முடிவுகள் குறித்து கவனம் செலுத்தப்படுவது தொடர்பில் சீனா மகிழ்ச்சியடையவில்லை என்றவாறான நிலைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

எனினும் சீன ஜனாதிபதி தனது கருத்துக்களில் எந்தவொரு மூன்றாவது நாட்டின் பெயரையும் குறிப்பிடவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜேர்மனியில் இருந்து ஆராய்ச்சி கப்பலை நாட்டுக்குள் அனுமதித்த போதும், தமது ஆராய்ச்சிக் கப்பல்களை இலங்கை அனுமதிக்காமை குறித்து சீனப் பிரதமர் லீ கியாங் கவலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜேர்மன் கப்பலை எரிபொருள் நிரப்புவதற்கு மட்டுமே இலங்கை அனுமதித்துள்ளதாக பிரதமர் குணவர்தன பதிலளித்துள்ளார்.

சட்டத்தின் பிரகாரம் மீள் நிரப்புதல் போன்ற கோரிக்கைகளை இலங்கை நிராகரிக்க முடியாது என்றும் சீன ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.(நி-5-6)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று காலை 10.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 92



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இரக்கத்திலும் ஓர் இடைஞ்சல்

இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே. மௌனகுரு சுவாமிகள் சொன்னது இது. இந்த காலத்திற்கு மிகவும் அவசியமான ஒரு பொன்மொழி. ஏமாற்றுபவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற போது ஒரு நல்ல காரியம் செய்தால் கூட ரொம்ப ஜாக்கிரையாக இருக்க வேண்டியிருக்கிறது.

ஒரு வசதியான ஆள் 10,000 ரூபாய் பணத்தை எடுத்து கொண்டு புறப்பட்டார். அந்த பணம் தொலைந்து விடும் என்று அதனை பத்திரமாக ஒரு பையிலே வைத்து மூடி எடுத்து கொண்டு புறப்பட்டார். ஆனால் பாருங்கள். அந்த பணத்தோட சேர்த்து பையையும் தொலைத்து விட்டார். ரொம்ப சுத்தம். ! இரண்டும் போய் விட்டது.

அதன் பின்பு போன வந்த இடம் எல்லாவற்றையும் தேடி பார்த்தார். ஒண்டும் கிடைத்த பாடில்லை.

நேராக ஒரு பத்திரிகை நிலையத்திற்கு போனார். ஒரு விளம்பரம் கொடுத்தார். என்னுடைய கைப்பை பணத்தோட தொலைந்து விட்டது. அது யாராவது கண்டு பிடித்தால் தயவு செய்து தன்னிடம் கொண்டு வந்து கொடுங்கள்.

அப்படி அதை கண்டெடுத்து கொடுத்தால் 1000 ரூபாய் பணம் கொடுக்கப்படும்! என்று பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார்.

ஒரு சாதாரண தொழிலாளி கையில் அந்த பணப்பை கிடைத்து விட்டது. அந்த ஆள் பத்திரிகையில் அந்த விளம்பரத்தையும் பார்த்தார்.

அவர் ரொம்ப நேர்மையானவர். இன்னொருவர் பணம் நமக்கு எதற்கு என்று நினைப்பவர்.

அந்த பத்திரிகை விளம்பரத்தில் இருந்த விலாசத்தை பர்த்தார். அந்த இடத்திற்கு போனார். பணத்தை கொடுத்தார். எண்ணி பாருங்கள் என்று சொன்னார். எவ்வளவு பொறுப்போட அந்த ஆள் பணப்பையை கொண்டு போய் கொடுத்து இருக்கிறார். ஆனால் அந்த ஆளுக்கு பணப்பை கிடைத்த உடனும் புத்தி மாறி போய் விட்டது.

எதற்கு இந்த ஆளுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று யோசித்தார். பத்திரிகையில் கொடுப்பதாக விளம்பரப்படுத்தி விட்டு இப்போது எப்படி கொடுக்காமல் விடுவது. அதனால் எப்படி ஏமாத்தலாம் என்று யோசித்தார்.

ஒரு ஐடியா கண்டு பிடித்தார். உடனே அந்த பணப்பை கொண்டு வந்து கொடுத்த ஆளை கோபமாக பார்த்தார்.

ஏய் இந்த பையில் 10,000 ரூபாய் பணமும் ஒரு ரத்தினக் கல்லும் வைத்து இருந்தேனே அதை காணவில்லை. அதை நீ தான் திருடி இருக்கிறாய் என்றான்.

இது ஏதுடா வம்பாக இருக்கிறது என்று நினைத்து விட்டார் அவர். பணத்தை தவிர இதில் வேறு எதுவும் இல்லை என்று சொல்லி பார்த்தார். அவர் கேட்கவில்லை. எப்படி கேட்பார்.

1000 ரூபாய் பரிசை இல்லை என்று ஆக்குவதற்காக அல்லவா இந்த நாடகம் ஆடுகிறார். நாடகம் இதோட முடியவில்லை. பொலிஸ் ஸ்டேசன் வரைக்கும் போய் விட்டார்.

அந்த ஆள் அங்கேபோய் மாட்டி விட்டார். பின்பு அந்த வழக்கு கோர்ட்டுக்கு போய் விட்டது. பின்பு நீதிபதி வழக்கை விசாரித்தார். இந்த ஆள் பொய் சொல்கிறார் என்பதை நன்றாகவே புரிந்து கொண்டார். அனால் இவர் என்ன சொன்னார் தெரியுமா?

ஐயா நான் ரொம்ப கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவன். நான் என் வாழ் நாளில் பொய் சொன்னதே இல்லை. சத்தியமாக இந்த பையில் இர்த்தினக்கல் வைத்து இருந்தேன் என்று சாதித்தார். இதற்கு தகுந்த மாதிரி சில பொய் சாட்சிகளையும் தயார் செய்துவிட்டார்.

இரக்கப்பட்டு பணத்தை எடுத்து கொண்டு வந்து கொடுத்தவரின் நிலைமை ரொம்பவும் கவலைக்கிடமாக இருந்தது. நீதிபதி ரொம்பவும் பொறுமையாக கேட்டுக் கொண்டு இருந்து அந்த ஏமாத்து பேர்வழியை பார்த்து சொன்னார், ஐயா பெரியவரே உங்களை பார்த்த உடனே நீங்கள் பொய் ஏதும் சொல்ல மாட்டீர்கள் என்று எனக்கு தெரிந்து விட்டது.

அது மட்டுமில்லை இவ்வளவு சாட்சி வேறு இருக்கிறது. அதனாலே காணாமல் போன உங்களுடைய பை. இதுவாக இருக்காது. இதுவாக இருந்து இருந்தால் அதில் ரத்தினக்கல் இருந்து இருக்குமே. அதனால் இது உங்களின் பையாக இருக்காது.

பை இன்னும் கிடைக்கவில்லை என்று மறுபடியும் பத்திரிகையில் விளம்பரம் போடுங்கள் என்று சொன்னார். அந்த ஆள் பதறிப்போய் உண்மையை ஒத்து கொண்டு விட்டார். பரிசுத் தொகையையும் வாங்கி இவருக்கு கொடுத்துவிட்டு பொய் சொல்லியதற்காக இவருக்கு அபராதமும் போட்டு விட்டாராம் நீதிபதி.

டால்ஸ்டாய் எழுதிய இந்த கதையை நண்பர் ஒருவர் சொன்னார். அடுத்தவர்களுக்கு நல்லது செய்தால் கூட அதில் எவ்வளவு இடைஞ்சல் இருக்கிறது பார்த்தீர்களா? நான் கூட சில வேளைகளில் உதவி செய்வதாக நினைத்து கொண்டு உபத்திரத்தில் மாட்டிக் கொள்வதும் உண்டு. ஆப்பீஸ் நோட்டீஸ் போர்ட்டில் ஒரு இக்லேண்ட லெட்டர். அட்ரசை கேட்டேன் அதில் எனக்கு தெரிந்த நண்பரின் பெயர் ஒன்று இருந்தது.

சரி எடுத்து கொண்டு போய் அவரிடம் கொடுப்போம் என்று கொண்டு போய் கொடுத்தேன். வாங்கி பிரித்து பார்த்து விட்டு என்னை முறைத்து பார்த்தார்... என்னை கடித்து குதறாத குறையாக. இதுக்கு என்னையா அவசரம். இதை போய் எடுத்து கொண்டு கொடுக்க வந்து விட்டாய் என்று பாய்ந்து விழுந்தார். என்னாங்க விடயம் என்று விசாரித்தேன். தாய் வீட்டிற்கு போன அவர்களின் சம்சாரம் திரும்பி வருவதாக தபால் போட்டு இருக்கிறார் என்று சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறும் பகுதிகளில் போக்குவரத்து நடைமுறைகளை இறுக்கமாக்க வேண்டும்

## முல்லைத்தீவு, கிளிநொச்சி பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு திருமுறிகண்டிக்கும் கிளிநொச்சி இரணைமடுவுக்கும் இடையில் அடிக்கடி நிகழ்கின்ற வீதி விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்து பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. திருமுறிகண்டி, இந்துபுரம், பொன்நகர், பாரதிபுரம், கனகாம்பிகைக்குளம் ஆகிய கிராமங்களின் மக்கள் செறிவாக வாழ்கின்ற இப் பகுதியில் ஏ-9 வீதியில் அடிக்கடி நிகழும் விபத்துகளினால் உயிரிழப்புகளும் படுகாயங்களும் தொடர்ந்து ஏற்படுகின்றன.

அறிவியல்நகர் பகுதியில் பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து செல்கின்றனர். இப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் நிலையில் கூடுத லான போக்குவரத்து பொலிஸார் வாகனங் களின் வேகத்தினை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமே விபத்துகளை கட்டுப்படுத்த முடியும். அத்துடன் மேற்படி கிராமங்களில் இருந்து கனகாம்பிகைக்குளத்திற்கு நீருக்காக வருகின்ற கால்நடைகளை உரிமையாளர்கள் பாதுகாப்பாக நீருக்கு வந்து செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் கால்நடை களினாலும் தொடர்ச்சியாக விபத்துகள் ஏற்படுகின்றன.

கால்நடைகளும் உயிரிழக்கின்ற, படுகாயமடைகின்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நேற்று முன்தினமும் வேகத்தினை கட்டுப்படுத்த முடியாத டிப்பர் வாகனம் ஒன்று வீதியினைவிட்டு விலகி வீடு ஒன்றிற்குள் புகுந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)





கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்திலிருந்து தரம் 7ஐ சேர்ந்த த.அவந்திகா, தரம் 6 ஐ சேர்ந்த ச.வர்ஷா, ச.சஞ்சித், சு.கிசாரா ஆகிய மாணவர்கள் தேசிய ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (படம்- கிருஷ்ணகுமார்)

## புத்தாண்டை முன்னிட்டு களைகட்டிய கிளிநொச்சி



(முறிகண்டி)

தமிழ் சிங்கள புத்தாண்டை வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர்.

நேற்று முதல் நீண்ட விடுமுறை என்பதால் கிளிநொச்சி மக்கள் புத்தாடை கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.


கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் அதிக ஆர்வம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3087

வந்திதா




மிலானி




சலோன்




யுகதேவ்




துவாரகை




சந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 453





என் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது? இன்று பகல் நாங்கள் எல்லோரும் வயிறு புடைக்க விருந்துண்டோம். 'நீ சாப்பிட்டாயா?' என்று கூடக் கேட்கத் தவறிவிட்டேன்! வா! பூங்குழலி! என்னுடன் அந்தப் புதைந்த கப்பலுக்கு வா! அதில் தானியங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அந்தத் தானியங்களைத் திரட்டி இன்று இரவு கூட்டாஞ் சோறு சமைத்து உண்போம். சாப்பிட்ட பிறகு நீ உன் வழியே போகலாம்.

ஐயா! சாப்பிட்டால் உடனே அங்கேயே படுத்துத் தூங்கி விடுவேன். இப்போதே கண்ணைச் சுற்றுகிறது.

அதனால் என்ன? நீ அந்தப் புதைந்த கப்பலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு! நானும் யானையும் கரையிலிருந்து காவல் காக்கிறோம். பொழுது விடிந்ததும் நீ உன் படகைத் தேடிப்போ!

இவ்விதம் சொல்லி இளவரசர் பூங்குழலியின் கரத்தைப் பற்றி அவளைத் தாங்குவார் போல நடத்தி அழைத்துக் கொண்டு சென்றார். உண்மையிலேயே அவளுடைய கால்கள் தள்ளாடின என்பதைக் கண்டார். அந்தப் பெண்ணின் அன்புக்கு ஈரேழு உலகிலும் இணை ஏது என்று எண்ணியபோது அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது.

புதைந்திருந்த கப்பலுக்கு அவர்கள் திரும்பி வந்து சேர்ந்த போது அக்கப்பலுக்குப் பின்னால் புகை கிளம்புவதைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஒருவேளை அந்தக் கப்பலைச் சேர்ந்தவர்கள் எங்கேயாவது போயிருந்து திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? திடீரென்று அவர்கள் முன்னால் தோன்றினால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நேரிடக் கூடும். ஆகையால் மெல்ல மெல்லச் சத்தமிடாமல் சென்றார்கள். வெகு சமீபத்தில் அவர்கள் போன பிறகும் பேச்சுக்குரல் ஒன்றும் கேட்கவில்லை. மறைவில் இருப்பவர்கள் யார், அவர்கள் எத்தனை பேர் என்றும் தெரியவில்லை. வள்ளிக்கிழங்கு சுடும் மணம் மட்டும் கம்மென்று வந்தது. பூங்குழலியின் நிலையை இப்போது இளவரசர் நன்கு அறிந்திருந்தபடியால் அவளுடைய பசியைத் தீர்ப்பது முதல் காரியம் என்று கருதினார். ஆகையால் வந்தது வரட்டும் என்று கப்பலைச் சுற்றிக் கொண்டு அப்பால் சென்று பார்த்தார். அங்கே அடுப்பு மூட்டிச் சமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது ஒரு பெண்மணி என்று தெரிந்தது. யார் அந்தப் பெண்மணி என்பதும் அடுத்த கணத்திலேயே தெரிந்து போயிற்று. அந்த மூதாட்டி இவர்களைக் கண்டு ஆச்சரியப்பட்டதாகத் தெரியவில்லை. இவர்களை எதிர்பார்த்தவளாகவே தோன்றியது. வாய்ப் பேச்சின் உதவியின்றி இவர்களை அம்மூதாட்டி வரவேற்றாள். சற்று நேரத்துக்கெல்லாம் அமுதும் படைத்தாள். பழையாறை அரண்மனையில் அருந்திய இராஜ போகமான விருந்துகளையெல்லாம் காட்டிலும் இம்மூதாட்டி அளித்த வரகரிசிச் சோறும் வள்ளிக்கிழங்கும் சுவை மிகுந்ததாக இளவரசருக்குத் தோன்றியது.

சாப்பிட்ட பிறகு மூன்று பேரும் கப்பலின் தளத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சந்திரன் இப்போது நன்றாக மேலே வந்திருந்தான். கப்பலின் தளத்திலிருந்து பார்த்தபோது கடலும் தொண்டைமானாறும் ஒன்றாகக் கலக்கும் இடமும் அதற்கு அப்பால் பரந்த கடலும் தெரிந்தன. முன்மாலை இருள் வேளையில் பச்சைத் தாமிரத் தகட்டைப்போல் தோன்றிய கடல் இப்போது பொன் வண்ண நிலாவின் கிரணங்களினால் ஒளி பெற்றுத் தங்கத் தகடாகத் திகழ்ந்தது.

அவர்கள் இரவில் திறந்த வெளியில் சுற்றிலும் நீர் சூழ்ந்த இடத்தில் இருந்த போதிலும் புழுக்கத்தினால் உடம்பு வியர்த்தது. காற்று என்பது லவலேசமும் இல்லை. இதைப்பற்றி இளவரசர் பூங்குழலியிடம் கூறியதை அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண்டாள். வானத்தில் சந்திரனைச் சுற்றி ஒரு சாம்பல் நிறவட்டம் ஏற்பட்டிருப்பதை சுட்டிக் காட்டினாள்.


சந்திரனைச் சுற்றி வட்டமிட்டிருந்தால் புயலும் மழையும் வரும் என்பதற்கு அடையாளம் என்று பூங்குழலி விளக்கிக் கூறினாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சீலனின் தந்திரம்



வைரபுரி என்ற நாட்டில் பல கோடிகளுக்கு அதிபதியாக சீலன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தயாளகுணம் கொண்டவன். அந்நாட்டு மன்னன் பர்வதனனின் ஆருயிர் நண்பன். பொக்கிஷத்தில் பணக்குறைவு ஏற்பட்ட போதெல்லாம் மன்னனுக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து பிறகு வாங்கிக் கொள்வான் சீலன். அப்படி கிடைத்த வட்டிப் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி வந்தான் சீலன்.

ஓவியக் கலையில் கைதேர்ந்தவன் சீலன். மற்ற கலைகளிலும் அவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அழகான சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், வேலைப்பாடுடன் கூடிய கைவினைப் பொருள்கள் என்றால் என்ன விலை கொடுத்தாவது வாங்கி விடுவான். ஆனால், அப்படி வாங்கும் பொருட்களை யார் கேட்டாலும் கொடுக்கவும் மாட்டான்.

மன்னன் பர்வதனுக்கு, சீலனின் இந்தப் பிடிவாதக் குணம் ஒன்றுதான் பிடிக்காமல் இருந்தது. அதனால் சீலனிடமிருந்த அழகிய பொருள்களில் ஒன்றைக் கூடப் பெற முடியாமல் போனது.

ஒரு நாள் சீலனைக் காண வாலிபன் ஒருவன் வந்தான். கிழிந்த ஆடைகளை அணிந்து தாடி வளர்த்துக் கொண்டிருந்த போதிலும் அவன் உயர் குடியில் பிறந்தவன் என்று சீலனுக்கு தெரிந்துவிட்டது. அவன் அந்த இளைஞனை வரவேற்று உட்காரும் படி சொன்னான்.

"ஐயா! என்னை இந்தக் கோலத்தில் கண்டவர்கள் எல்லாரும் விரட்டினார்களே ஒழிய என்னை "உட் கார்' என்று இதுவரை யாரும் சொல்லியதில்லை. மிக்க நன்றி. நீங்கள் கலை அம்சம் கொண்ட பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

"என் பெயர் சக்தி. என் முன்னோர்கள் ஜமீன்தாரர்கள். எங்களுக்குச் சொந்தமான அபூர்வ ஓவியம் ஒன்றைத் தங்களுக்கு விற்க எடுத்து வந்துள்ளேன்," எனக் கூறித் தான் கொண்டு வந்த ஓவியத்தை அவனிடம் காட்டினான்.

அந்த ஓவியத்தைக் கண்டு சீலன் பிரமித்தான். ஒரு தாய் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவது போன்ற படம் அது. குழந்தை தன் பொக்கை வாயை விரித்து சிரிப்பது மிக அழகாக தீட்டப்பட்டிருந்தது. வண்ணங்கள் கண்களுக்கு குளிர்ச்சி தரும் விதமாகத் தீட்டப்பட்டிருந்தன.

இது கற்பனையில் தோன்றிய படமாக இல்லை. நேரில் நடப்பதை பார்த்து இதனை வரைந்திருக்கிறார் ஓவியர். என்ன நான் சொல்வது சரிதானே? என்று கேட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லும் வல்ல தமைச்சு.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களே தேவை

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவதா? இல்லையா? என்ற வாதம் சூடுபிடித்துள்ளது.

இதில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ள போதிலும் அந்தக் கருத்துக்கள் எவையும் தமிழ் மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக இல்லை.

மாறாக, தமிழ் அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் தமிழ் சிவில் சமூகத்தின் கருத்துக்களுமே இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இக்கருத்துக்களை எவரும் தமிழ் மக்களின் கருத்துக்களாகக் கருதிவிடக்கூடாது.

ஏனெனில் தமிழ் அரசியல் கட்சிகளின் கருத்து என்பது தத்தம் கட்சி அரசியல் சார்ந்து முன்வைக்கப்படுவது.

எனவே அஃது அரசியல் கட்சியின் கருத்தாகுமேயன்றி, பொதுமக்களின் கருத்தாகப் பிரதிபலிக்க முடியாது.

மாறாக, தமிழ் சிவில் சமூகத்தின் கருத்து என்று கூறும்போது தமிழ் சிவில் சமூகம் என்பது உண்மையில் தமது பெயர் விபரங்களை வெளிப்படுத்தாத ஒன்று என்றாயிற்று.

சுருங்கக்கூறின் தமிழ் சிவில் சமூகம் என்பது தோற்றுப்போன ஒரு குழுமம் என்று கூறுவதோடு அதனை நிறுத்திவிட முடியும்.

இதை நாம் கூறும்போது இதற்கு எதிர்க் கருத்து எழவே செய்யும்.

ஆனால் நாம் கூறுவது; ஒரு இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சிவில் சமூகம் என்பது தனித்து அறிக்கைகளோடு மட்டும் உயிர்வாழ்வதில்லை.

மாறாக, அரசியல் தரப்புகள் தவறு விடும் போது அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இளைஞர்களை வழிப்படுத்த வேண்டும். எம் இனத்தின் பெருமையை மாணவர் சமூகத்துக்கு எடுத்துக்கூற வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, பொதுமக்களின் கருத்துக்களைத் திரட்டி அதிலிருந்து பெறுமதியான தீர்மானங்களையும் முன்மொழிவுகளையும் எடுத்து அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஆனால் இவை எதுவும் சிவில் சமூகத்திடம் இல்லை.

தவிர, தமிழ் மக்களுக்காக சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது நேரத்தைத் தாராளமாகச் செலவிட வேண்டும். தமிழ் இனத்தின் உரிமையை வென்றெடுப்பது தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் உசாவ வேண்டும்.

இவை எதுவுமே இல்லாத ஒரு குழுமம் சிவில் சமூகம் என்ற பேரில் தமிழ் மக்களை நம்ப வைப்பது மனச்சாட்சிக்கு விரோதமானது.

பரவாயில்லை. அவரவருக்கு அவரவர் வேலையைச் செய்வதற்கே நேரமில்லை. குறைந்தது ஒரு கூட்டத்திலேனும் முழுமையாகப் பிரசன்னமாகி இருப்பதுகூட, முடியவில்லை.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சிவில் சமூகத்தின் கருத்தும் ஏதோவொரு வகையில் சுயநலப்பட்டதே.

ஆக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதுதான் மிகவும் தேவையானது.

**மக்களே அவதானம்!**

## போலித்தாள்களின் புழக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

போலித்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் பணத்தை கையாள்வதில் கவனமாக இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக கொழும்பு, புறநகர் உள்ளிட்ட பல பகுதிகளிலும் போலித்தாள்களை மாற்றுவதற்கு நபர்கள் வரலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

மேலும் பண பரிவர்த்தனை செய்யும் போது எந்த பணத்தாளில் மாற்றம் இருந்தால் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5-6)

## ஆசிரிய வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

### கிளி.தெற்கு பதில் கல்விப் பணிப்பாளர்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விரைவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என கிளிநொச்சி தெற்கு வலய பதில் கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவில் இரசாயனவியல் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு ஆசிரியர்கள் பணியில் இல்லாதது தொடர்பாக கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் நிலவுகின்ற ஆசிரியர்கள் நெருக்கடி தொடர்பாக பெற்றோர்களினாலும் வலயத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் மாகாண கல்வித் திணைக்களமும் இப்பாடசாலைக்கு சென்று நிலைமைகளை அவதானித்து உள்ளது. விரைவில் இப்பாடசாலையில் நிலவுகின்ற ஆசிரியர் நெருக்கடிக்கு தீர்வுகள் காண்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு கிளிநொச்சி வலயத்திற்கு வருகின்ற ஆசிரியர்களை அக்கராயன் போன்ற நெருக்கடிகள் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் உள்ள கணித, விஞ்ஞான பிரிவுக்கான மாணவர்கள் மாலை நேர கற்றலுக்காக இருபது கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி நகரத்திற்கே செல்ல வேண்டி உள்ளது.

இப்பாடசாலையில் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறுகிய காலங்களுக்குள் கணித, விஞ்ஞான பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதன் நிலைகளை மாணவர்கள் பெற்ற நிலையில் தற்போது ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு இல்லாததன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை நியமிப்பதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

## குப்பைகளை கொட்டுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

### துண்டுப் பிரசுரங்களை காட்சிப்படுத்திய பொலிஸார்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொது இடங்களில் குப்பைகள் கொட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலியுறுத்தி பொலிஸார் துண்டுப் பிரசுரங்களை காட்சிப்படுத்தி வருகின்னர்.

அதிகளவு மக்கள் நடமாடி வருகின்ற பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதினால் அக்கழிவுகளினால் போக்குவரத்து பயணிகளுக்கும் அசௌகரிங்களுக்கு முகம் கொடுப்பதாலும் பல தொற்று நோய்களிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாலும் இவ்வாறான வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)

## தேர்தல்கள் தொடர்பில் கருத்து கூற மொட்டுக் கட்சிக்குத் தடை

(அக்கராயன்)

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டதை அடுத்து, முறையான முடிவு எடுக்கப்படும் வரை பொதுஜன பெரமுனவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக் கூறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் கட்சித் தலைமையகம் எடுத்துள்ளது.

பொதுஜன பெரமுன தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முடிவுகளில் பிளவுபட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தில் பதவிகளை வகிக்கும் அந்தக்கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேட்புமனுவை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர்.

அந்தவகையில் அமைச்சர்களான சுசில் பிறேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க மற்றும் அலிசப்ரி ஆகியோர் அடங்குவர்.

அத்துடன் கட்சியில் மற்றொரு பிரிவினர் கட்சி சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்தே பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கருத்துக்கூறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## புத்தாண்டை முன்னிட்டு யாழில் நடைபெற்ற பாரம்பரிய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு, யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேயர் ஜெனரல் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கு அமைவாக போட்டிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில், தமிழ் மற்றும் சிங்கள போட்டியாளர்கள், இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது கோலம் போடுதல், கிடுகு பின்னுதல், சாக்கோட்டம், தலையணை சண்டை உள்ளிட்ட பல போட்டிகளும், நடனங்களும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேயர் ஜெனரல் விக்கிரமசிங்க, இராணுவ உயர் அதிகாரிகள், போட்டியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (நி-5-6-33)

## சிறுபோக பயிர்ச்செய்கைக்கான நீர் உரிமங்களை கைமாற்றமுடியாது

### தீர்மானம் நிறைவேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர் செய்கைக்காக வழங்கப்படும் நீர் உரிமம் விற்கப்படவும் கைமாறவும் முடியாது என நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோகச் செய்கைகளின் போது கடந்த ஆண்டுகளில் பெருமளவு நீர்ப்பங்கு உரிமங்கள் பலலட்சம் ரூபாவிற்கு விற்கப்படுதல் கையாடல் செய்தல் என பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு விசாரணைகள் மூலமும் உறுதியாகியுள்ளன.

இதனையடுத்து 2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர் செய்கைக்காக வழங்கப்படும் நீர் உரிமம் விற்கப்படவும் கைமாறவும் முடியாது என நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர் செய்கையை பங்கீட்டு அடிப்படையில் முன்னெடுப்பதற்கான தீர்மானம் நேற்று முன்தினம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சராளி) ஸ்ரீ சித்திவேலாயுதர் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய பூசகர் நித்தியகஜேந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கிராமத் தலைமைக்காரரும் சிறு வழக்குகளை விசாரித்து 10 வெள்ளிக்காசிற்கு மேற்படாத குற்றப்பணம் விதிக்க அதிகாரம் பெற்றிருந்தனர். மேலும் தத் தம் பகுதிகளில் பொலிஸ் வேலைக்குப் பொறுப்பாயிருந்த அவர்கள் சகல குற்றவாளிகளையும் கைது செய்து குறிப்பிட்ட அதிகாரிகளின் முன் முன்னிலைப்படுத்தக் கடமைப் பாடுடையவர்களாக இருந்தனர்.

**கன் சபாக்கள்**

மேற் கூறப்பட்ட நீதிபரிபாலன முறையைத் தவிர வேறு இரு வகைப்பட்ட நீதிமன்றங்களும் நாட்டில் இயங்கி வந்தன. இவை கன்சபாக்களும் றட்டே சபாக்களு மாகும். கன்சபா அல்லது கிராமச் சபை கிராமத்தின் பிரதான தலைவர்களையும் அனுபவம் மிகுந்த முதியவர்களையும் கொண்டிருந்தது.

கன்சபாவையின் தீர்ப்பினின்று இரட்டை சபாவுக்கு முறையிட மக்களுக்கு உரிமையிருந்தது. இரட்டை சபா மாவட்ட நீதிமன்ற மாகும். மாவட்டத்திலிருந்த ஒவ்வொரு கிராமத்தின் பிரதிநிதியை அது உறுப்பினராய்க் கொண்டது. இம்மன்றத்தின் நடைமுறைகளும் கன்சபாவையின் நடைமுறைகளைப் போன்றவை.

இந்நீதிபரிபாலன முறை, மக்கள் பட்ச பாதகமற்ற நீதியை இலகுவாகவும், செலவின்றியும், தாமதமின்றியும் பெறும் நோக்குடனேயே அமைக்கப்பெற்றது. ஆனால், நிர்வாகத்துக்கும், நீதி பரிபாலனத்துக்கும் ஒரே அதிகாரிகள் பொறுப்பாயிருந்த காரணத்தினால் பல ஒழுங்கீனங்களும், ஊழல்களும் எழுந்து அதன் நோக்கத்தைக் கெடுத்தன.

**மானியமுறையும் இராசக்காரியமும்**

மேலே விபரிக்கப்பட்ட அரசாட்சி முறைக்கும், அரசாங்க நிர்வாகத்துக்கும், நீதி பரிபாலனத்துக்கும் ஆணிவேர் போன்று அமைந்தது, அப்பிரதேசத்தில் நிலவிய மானிய முறையும் இராசக்காரிய முறையுமாகும்.

புராதன காலத்தைப் போன்று அரசனே "நிலங்களின் அதிபதி" என்ற கொள்கை நிலவியபோதும் அவனுக்கு எதேச்சாதிகார முறைப்படி நிலங்களை அபகரிக்க அதிகாரமிருக்கவில்லை, "தனிச் சொத்துரிமை பாராட்டப்படாத நிலங்கள் யாவும் அரசனுக்குச் சொந்தமானவை" எனும் கொள்கை தான் அரசனின் நிலவுரிமைகளுக்கு அத்திவாரமாக அமைந்ததெனலாம்.

இராசதானிக்கு அருகில் அரசனுக்குச் சொந்தமாக மிகவும் விசாலமான நிலங்களிருந்தன. கண்டி மாநிலத்தைச் சுற்றியிருந்த காடுகளும் அரச கிராமங்களும் அவனின் தனிச் சொத்துக்கள் போன்று உபயோகிக்கப்பட்டன. தலை நகரத்தினின்று தூரம் அதிகரிக்க, அரசனின் காணியாட்சி உரிமைகளும் குறைந்தே காணப்பட்டன. நுவரக்கலாவிய, தமன்கடுவைப் பகுதிகளில் அரச கிராமங்கள் அறவே இருக்கவில்லை.

காணியுடையவர்கள் அரசனுக்கு (அல்லது அரசனின் அலுவலாளருக்கு) சேவைகள் புரியக் கடமைப் பாடுடையவர்கள் என்ற கொள்கை சிங்களவரிடையே புராதன காலந்தொட்டு நிலவிய ஒரு கோட்பாடாகும். இச்சேவையின் கடினமும் அளவும் பலரிடையே வேறுபட்டது. ஒரு சிலருக்கு ஆண்டுதோறும் அரசன் முன்னிலையில் வெற்றிலையைத் தட்சணையாகக் கொடுத்து கௌரவம் செய்வதுடன் அரச சேவைகள் முடிவடைந்தன.

வேறு சிலர் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட வேண்டிய கடினமான சரீர சேவைகளைப் புரிய வேண்டிய நிலைக்குள்ளாயினர். இன்னும் சிலர், தம் சாதிக்கேற்ற தொழில் முறையில் சேவை செய்ய வேண்டியவர்களாயினர்.

அதி உயர் வகுப்பினர் தொடக்கம், அதி குறைந்த வகுப்பினர் ஈறாக, தனி மனிதன் ஒவ்வொருவனையும் ஒவ்வொரு தனி வகுப்பினையும் கட்டுப்படுத்திய கடமைகளினதும், சேவைகளினதும் சங்கிலித் தொடர் போன்ற ஒழுங்கு முறைதான், அரசாங்கத்தின் குடியியல், நீதி, நிர்வாக எந்திரத்தை இயக்கவும், விவசாய முயற்சிகளை சீராக நடாத்தவும், அரசன் பாதுகாப்புப் போர்களை நடாத்தவும் பயன்பட்டது" என்கிறார் நொக்ஸ்.

நாட்டில் நிலவிய அதி உயர் காணியுரிமை பரவணி உரிமையாகும். இவ்வுரிமையாளருக்கு அரசன் நிலங்களைச் சதா காலத்துக்கென வழங்கினான். இக் காணியுரிமையாளர் தாமும் அரசனுக்குச் சில சேவைகளை (சரீர சேவை அல்லது திறை இறுக்க) புரியவேண்டியவராயிருந்தனர். இது இராசக்காரியம் என அழைக்கப்பட்டது. இராசக்காரியம் என்பது நிலத்தின்மேல் (ஆளின்மேலல்ல) விதிக்கப்பட்ட சேவையாகும்.

காணிகளுடையோர், குறிப்பிட்ட இராசக்காரிய சேவைகளைச் செய்யத் தவறின் அவர்களுடைய காணிகள் புறப்பாட்டு அல்லது உரித்தாளரில்லாத நிலங்களாகி அரசனைச் சேர்ந்தன. அந் நிலத்தைப் புதிதாகப் பெறும் உரிமையாளன், அக்காணியுடன் சம்பந்தப்பட்ட இராசக்காரிய சேவைகளையும் புரியக் கடமைப்பாடுடையவனானான்.

காணிகள், விற்பனை அல்லது நன்கொடை மூலம் கைமாறின. புதுச் சொந்தக்காரர் அச் சேவையைத் தொடர்ந்து செய்தனர். இதனால் அரசனது நிர்வாகம் ஓரளவு சீராக நடைபெற்றதென்றே கொள்ளவேண்டும்.

**கபடாகம்**

கபடாகம் அல்லது அரசனுக்குச் சொந்தமான காணிகள் மகா களஞ்சியத்தினால் நிருவகிக்கப்பட்டன. தனியாருக்கு அல்லது அலுவலாளருக்கு வழங்கப்பட்ட நிலங்களை, சேவை செய்யாமை, திறை கொடுக்காமை, தேசத் துரோகம் எனும் காரணங்களை முன்னிட்டு அரசன் பறி முதலாக்கிய பொழுது, அவை யாவும் களஞ்சியத்தைச் சேர்ந்தன.

அவற்றின் பிரயோசனங்களை அரசன் அனுபவித்தான். களஞ்சியத்தை நிருவகிக்க ஒரு "கபடா நிலைமே'யை அரசன் நியமித்தான். நிலமேக்கு உதவியாக அவனது சிபார்சின் பேரில் நான்கு செயலாளரும், நான்கு கண்காணிகளும் நியமிக்கப்பட்டனர்.

செயலாளர்கள் கணக்குகளுக்குப் பொறுப்பாயிருந்தனர். செயலாளர் காலத்துக்குக் காலம் அரச கிராமங்களுக்குச் சென்று சேவை செய்ய வேண்டிய நிலங்களையும், புறப்பாட்டு நிலங்களையும் அட்டவணை செய்து, காணி அட்டவணைகளைத் தயாரித்தனர்.

களஞ்சியத்தைப் பாதுகாப்பதன் பொறுப்பு கண்காணிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. களஞ்சியத்தைத் துப்பரவு செய்தல், பணி விடைகள் கொண்டு செல்லுதல் போன்ற வேலைகளுக்காக பணியாளர்கள் பலர் அமர்த்தப்பட்டனர். கபடாகம் நிலங்கள் யாவும் மூவிதப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு பயிரிடப்பட்டன.

**1. முத்தற்று காணிகள்**

இவை பரிபூரணமாக அரசனுக்குச் சொந்தமான நிலங்களாகும். இவற்றை அரச பரவணிச் செய்கைக்காரர் சிலர் பயிரிட்டு, விளைந்த தானியத்தை மகா களஞ்சியத்தில் ஒப்படைத்தனர். அரச நிலங்களில் பரம்பரை பரம்பரையாகப் பயிர் செய்த குத்தகையாளர், விதை நெல்லை அரச களஞ்சியத்தினின்று பெற்றுத் தமது சொந்தச் செலவிலேயே பயிரிட்டனர்.

**2 பரவணிச் செய்கைக்காரரின் காணிகள்**

அரசனின் முத்தற்று நிலங்களைப் பயிரிடும் சேவைக்காகப் பரவணிச் செய்கைக்காரருக்கு வழங்கப்பட்டவை.

**3. வாரக்குடிகளின் நிலங்கள்**

இவை ஆண்டு தோறும் பிரதானியினால், ஒருவனுக்கு ஓர் அவுணம் வீதம் கொடுபட்ட நிலங்களாகும். வாரக்குடிகளில் சிலர், முத்தற்று நிலங்களில் சரீர சேவை செய்தனர். வேறு சிலர் விளைந்த தானியத்தைக் கிராமக் களஞ்சியத்துக்கும், கட்டளையிடப்படின் கண்டிக்கும் காவிச் சென்றனர். அவர்கள் பிரதானியின் வேலையாட்களாகவும் பணிவிடை புரிந்தனர்.

**காடுகள்**

உட இரட்டையிலிருந்த பல காடுகள் அரச நிலங்களாக மதிக்கப்பட்டன. இவற்றைப் பிரஜைகள் உபயோகிப்பதைப் பற்றிப் பலவித சட்டங்கள் இயற்றப்பட்டன. நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு சில பாகங்களில் பிரஜைகள் உபயோகப் படுத்தக் கூடாதெனத் தடையிடப்பட்ட காடுகள் பலவிருந்தன. அதிகாரி மூலம் அரசனின் அதிகாரமின்றி எவரும் அரச காடுகளைத் துப்பரவு செய்து நன்செய் நிலங்களாக மாற்ற முடியாது.

அதிகாரியின் உத்தரவின் பேரில் பிரஜைகள், காடுகளை நெல் வயல்களாக மாற்ற உரிமை பெற்றனர். நாளடைவில் அதிகாரி, இக்காணியின் மேல் இராசக்காரிய சேவையை விதித்தான். புதுக் கமக்காரனின் ஆயுள் காலத்தில் இராசக்காரியம் பொதுவாக அறவிடப்படவில்லை. அவனுக்குப் பிந்திய உரிமையாளர், சேவை செய்ய வேண்டியவர்களாயினர்.

**அரண்மனைச் சேவை**

அரசனுக்குத் தனிப்பட்ட சேவை புரிந்தவர்களும், அரண்மனை உத்தியோகத்தர்களும் தாம் செய்த அரச சேவைக்குக் கைமாற்றாக நிலங்களை மானியமாகப் பெற்றனர்.

இந்நிலங்கள் கிராமப்புறங்களில் இருப்பின் அவை கிராமப் பிரதானிக்குச் சேவை செய்யும் கடமையினின்று விடுவிக்கப்பட்டிருந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்து...

பொருள் விநியோகம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாக இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள் ளது.

நாட்டின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காக, பிரதான முனை யங்கள் மூலம் எரிபொருள் இருப்புக் களை இறக்குமதி செய்து கிடங்கு களில் போதுமான இருப்புக்களை பரா மரிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத் துள்ளதுடன், எரிபொருள் இருப்புக் களை பராமரிப்பது தொடர்பாக அனைத்து எரிபொருள் நிலைய உரிமையாளர் களுக்கும் அறிவித்துள்ளது.

விநியோகஸ்தர்களின் எரிபொருள் ஆர்டர் செய்யும் பணியை எளிதாக்கும் வகையில், காசோலை மூலம் பரிவர்த் தனை செய்ய வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில், எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்காக போதுமான டாங்கர்களை ஈடுபடுத்த இலங்கை பெற்றோலியசேமிப்புமுனைய நிறுவனம் தீர்மானித்துள்ளதாக பெற் றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள் ளது. (ம-7,10)



















## சில பொருட்...

குறைக்கப்பட்டு 1200 ரூபாயுக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 55 ரூபா விலை குறைக்கப்பட்டு 320 ரூபாயுக் கும், கோதுமை மா ஒருகிலோ 7 ரூபா குறைக்கப்பட்டு 185 ரூபாயுக்கும், ஒரு கிலோ வெள்ளை அரிசி 4 ரூபா குறைக்கப்பட்டு 185 ரூபாயுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7,10)

## வீட்டுக் கிணற்றி...

உயிரிழந்த பெண்ணுடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற் றும் மரண விசாரணைகளுக்காக சாவ கச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை சாவகச்சேரிப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,30)

## மதவாச்சியில்...

கடந்த 7ஆம் திகதி உத்தரவை மீறி பயணித்த லொறியை பின் தொடர்ந்து சென்று நிறுத்தி, அதிலிருந்தவர்களை கைது செய்ய முற்பட்டபோது, இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த இளை ஞர், மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அநுராத புரம் வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். (ம-7,10)

## எந்தச் சின்னத்...

கொள்ள வேண்டும் எனவும்,

மொட்டு, யானை மற்றும் அன்னம் ஆகிய சின்னங்கள் இல்லாமல் பொதுச் சின்னத்தில் அவர் களமிறங்க வேண் டும் எனவும் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

பொதுச் சின்னமாக இருந்தால் ஜனாதிபதியை ஆதரிக்க பல தரப்பு களும் முன்வந்துள்ளதால் தற்போது அந்தச் சின்னம் பற்றி ஜனாதிபதி கூடு தல் கவனம் செலுத்தியுள்ளார்.

சின்னம் மற்றும் கூட்டணியின் பெயர் என்பன உள்ளிட்ட விவகாரங் களைக் கையாள்வதற்கான ஆலோ சனைக் குழுவொன்றும் அமைக்கப்பட் டுள்ளது எனத் தெரியவருகின்றது. (ம-7,10)

## படுகாயமடைந்...

உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒன்ப தாம் திகதி இவர் மோட்டார் சைக்கி ளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதித்தள்ளியது.

இதில் மற்றைய மோட்டார் சைக் கிளைச் செலுத்தி வந்தவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளதுடன் மேற்படி குடும் பஸ்தர் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நம

சிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,10,60)

## யாழ்.போதனா...

யாலை பகுதியில் உள்ள தனியார் காணியில் கொட்டி தீ மூட்டியதை அடுத்து, வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்தும் சம்பவ இடத்திற்கு எவரும் வராததால் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மருத் துவக் கழிவுகள் கொட்டப்பட்டு எரிக் கப்படுவது தனக்குத் தெரியாது எனவும் அவ்வாறு நடந்திருந்தால் தவறு என வும் அதனை அகற்ற உடனடியாக நட வடிக்கை எடுப்பேன் என உறுதியளித் தார். (ம-7,10,33)

## '34 நாட்களில்...

நா. யோகேந்திரநாதனின் "34 நாட் களில் நீந்திக் கடந்த நெருப்பாறு" என்ற புத்தகம் எழுத்தாளர் தீபச்செல் வன் தலைமையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த புத்தக வெளியீடு தொடர்பாக நேற்று விசாரணை இடம்பெற்றதாக தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த புத்தகம் விடு தலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் நோக்கில் எழு தப்பட்டதா? என் றும் விசாரணை யின்போது கேட் கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை குறித்த புத்தகத் தின் வெளியீட்டு விழாவை நீங்கள் ஏன் நடத்தினீர் கள் என்று கேட் கப்பட்டது. கிளி நொச்சியின் மூத்த எழுத்தா ளர் நா. யோகேந் திரநாதனை மதிப் பளிப்பு செய்யும் நோக்கிலேயே வெளியீட்டு விழாவை நடத் தியதாகவும் அவர் குறிப்பிட் டார். நேற்றுக் காலை 11 மணி க்கு ஆரம்பிக்கப் பட்ட விசாரணை சுமார் இரண்டரை மணிநேரத் திற் கு மேலாக இடம் பெற்றமை குறிப் பிடத்தக்கது. (ம-7,10)

## பெர...

பெரமுனவின் பலரது கோரிக் கையை அடுத்து பசில் களமிறங்கு கின்றார் என தென்னிலங்கை செய்தியில் தெரி விக்கப்பட்டுள் ளது.

இதேவேளை இதுகுறித்து ஜனா திபதித் தேர்

தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் பசில் ராஜபக்ஷ களமிறக் கப்பட வேண்டும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது "பசில் ராஜபக்ஷ ஜனாதி பதியாக வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்கான அனைத்து தகுதி களும் அவருக்கு உள்ளன.

அவர் இந்நாட்டில் வேலை செய்து காட்டியவர், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடம் பசிலைப் பற்றி கேளுங்கள்.

ஆகவே அவர் ஜனாதிபதிப் பத விக்கு வருவதில் உள்ள தவறு என்ன? வேலை செய்து காட்டிய தலைவருக் குப் பதவி வழங்கப்படுவதே மிக பொருத் தம். அதற்கு தகுதியான நபரே பசில் ராஜபக்ஷ.

அதேவேளை, நாமல் ராஜபக்ஷ சிறந்த இளம் தலைவர். அவர் மொட் டுக் கட்சியை பலப்படுத்தி விடுவார் என்ற அச்சம் காரணமாகவே நாமலுக்கு எதிராகப் பிரசாரம் முன்னெடுக்கப்படு கின்றது" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)



















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
02 - 09 - 1947



உதிர்வு
11 - 04 - 2024

## திரு.சின்னத்துரை மகேந்திரன்

(முன்னாள் பண்டத்தரிப்பு கிராமிய வங்கிச் சேவை முகாமையாளர்,
முன்னாள் வலி தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர்,
முன்னாள் வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் தற்போதைய பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், கலைமகள் சனசமூக நிலைய தலைவர்)

பிரான்பற்று பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகேந்திரன் அவர்கள் 11.04.2024 நேற்று வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சத்தியவதி தம்பதிகளின் மருமகனும் நாகநந்தினியின் அன்புக் கணவரும் திவ்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பூநகரி), பிரேந்திரா (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் - வேலணை), குகேந்திரன்(டினோசன் ஹர்ட்வெயர்), வித்யா(ஆசிரியை - கொ/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்), நிகேதனா(யாழ். பல்கலைக்கழக மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விமலாதேவி மற்றும் கந்தசாமி(இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் உதயகுமார், சாந்தகுமார்(சுவிஸ்), விஜயகுமார்(U.K), ஜெயக்குமார்(U.K), சிவகுமார்(U.K), சுபாசினி(U.K), மதிவதனி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வசந்தி மற்றும் இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.04.2024 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(430)

தகவல்:
குடும்பத்தினர்
077 432 9354

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19 . 05 . 1930



மறைவு
17 . 03 . 2024

## அமரர் திருமதி லோகேஸ்வரி செல்லத்தம்பி

(நாரந்தனை, மானிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத் தலைவி அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு, மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பத்திரிகைகள், பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக அனுதாப செய்திகளை பகிர்ந்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியும் மலர்மாலைகள் அணிவித்தும் நேரில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவர்ந்து இத்தால் நவில்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நளை 13.04.2024 சனிக்கிழமை மு.ப 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 15.04.2024 திங்கட்கிழமை மு.ப 08.30 மணிமுதல் 11.30 மணிவரை அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (0015)

சுதுமலைச் சந்தியடி,
நாவலடி வீதி, மானிப்பாய்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்


வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (395)

074 17 37 684

Asian Furniture

ஏசியன் தளபாடத்தின் மாபெரும் Sales

No 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்) (C-0111)

077 358 3879
076 821 9416

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0112)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0112)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

Techna
Technical institute
Smart thinking leads to innovate
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

A/L தொழினுட்பப்பிரிவு
A/L 2024 DAY CLASS ஆரம்பம்
17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிரோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்(ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.
2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றது. (405)
077 170 3549

Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 165/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 788/= | |
| 1 Kg மல்லி | - 367/= | |
| 1 Kg அவல் | - 255/= | |
| 1 Kg சர்க்கரை | - 299/= | |
| 1 Kg கடலை | - 480/= | |
| 100g பிளம்ஸ் | - 125/= | |
| 01 கற்பூர பெட்டி | - 265/= | 340/= |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 160/= | 200/= |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | 1550/= |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | 175/= |

1049/=





1110/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும் (432)

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

சிறிராம் ஜீவல்லர்ஸ்



• யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
• 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
• அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
• அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-0110)
077 165 1729, 077 773 0567
021 222 8334


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org